அரசாங்க நிர்வாகச் சுற்றறிக்கை: 25/2014

எனது இல: EST - 4/PEMNT/03/0225
அரசாங்க நிர்வாக மற்றும்
உள்நாட்டலுவல்கள் அமைச்சு
சுதந்திர சதுக்கம்
கொழும்பு 07.

2014.11.12

அமைச்சுக்களின் செயலாளர்கள்
மாகாணங்களின் பிரதம செயலாளர்கள்
திணைக்களங்களின் தலைவர்கள்
அரச கூட்டுத்தாபனங்கள் நியதிச்சட்டச் சபைகள்

## தற்காலிக, அமைய ( நாளாந்த),பதில் கடமை, ஒப்பந்த மற்றும் சலுகை அடிப்படையில் சேர்த்துக் கொள்ளப்பட்ட உத்தியோகத்தர்களுக்கு 2015 வரவு செலவுத்திட்ட முன்மொழிவுக்கமைவாக நிரந்தர பதவியினை வழங்குதல்

அரசாங்கசேவை, மாகாண அரசாங்கசேவை, அரசாங்க கூட்டுத்தாபனம் மற்றும் நியதிச் சட்ட சபை என்பவற்றதில் தற்காலிக, அமைய (நாளாந்த), பதில்க டமை, ஒப்பந்தம் மற்றும் கருணை அடிப்படையில் சேர்த்துக்கொள்ளப்பட்டு தற்போது கடமையில் ஈடுபட்டு வருகின்ற உத்தியோகத்தர்களுக்கு 24.10.2014 ஆந் திகதியிலிருந்து நிரந்தர நியமனம் வழங்குவதற்கு 2015 வரவு செலவுத்திட்ட முன்மொழிவுக்கமை அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

02. இதன் அடிப்படையில் 24.10.2014 ஆம் திகதி முதல் பின்வரும் சேவைச் வகுதிகளில் காணப்படும் பதவிகளில் தொடர்ந்து 180 நாட்கள் திருப்திகரமான சேவைக் காலத்தினைப் பூர்த்தி செய்துள்ள உத்தியோகத்தர்களுக்கு நிரந்தர நியமனம் வழங்கப்படும்.

(அ) ஆரம்ப தரம் - தேர்ச்சியற்ற ( PL 01 )/(U - PL 1)

(ஆ) ஆரம்ப தரம் - பகுதி (அரை)தேர்ச்சி பெற்ற ( PL 02 ) /(U - PL 2)

(இ) ஆரம்ப தரம் - தேர்ச்சி பெற்ற ( PL 03 ) /(U - PL 3)

(ஈ) முகாமைத்துவ உதவியாளர் -தொழில்நுட்பம் சாராத 02 ( MN 01 )/U-MN1)

(உ) முகாமைத்துவ உதவியாளர் - தொழில்நுட்பம் சார்ந்த 03( MT 01 )

(ஊ) முகாமைத்துவ உதவியாளர் -தொழில்நுட்பம் சாராத C1 ( MA 1-1)

(எ) முகாமைத்துவ உதவியாளர் - தொழில் நுட்பம் சாராத C2( MA 1-2)

03. நிரந்த நியமனத்தை வழங்குவதற்காக (அ), (ஆ) மற்றும் (இ) என்பவற்றின் கீழ் காட்டப்பட்டுள்ள சேவைத் தொகுதிகளுக்குரித்தான உத்தியோகத்தர்களுக்கு ஆகக் குறைந்தது 8ஆம் வகுப்பு / 9ஆம் ஆண்டு சித்தியடைந்திருப்பது போதுமானதாகும். அதே போன்று மேலே (ஈ), (உ), (ஊ) மற்றும் (எ) என்பவற்றின் கீழ் காட்டப்பட்டுள்ள சேவைத் தொகுதிகளுக்குரித்தான உத்தியோகத்தர்கள் மொழி அல்லது இலக்கியம் மற்றும் கணிதம் உட்பட ஆகக் குறைந்தது ஆறு (06) பாடங்களில் க.பொ.த. (சா/த) பரீட்சையில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

04. இந்த சுற்றறிக்கையின் ஏற்பாடுகளுக்கமைவாக தகுதி பெற்ற அனைத்து ஊழியர்களுக்கும் 24.10.2014 ஆந் திகதியிலிருந்து அமுல்படுத்தப்படும் வகையில் மேற்குறிப்பிடப்பட்டுள்ள வகுதிகளின் கீழ் சேர்த்துக் கொள்ளப்பட்ட பதவிகளில் நிரந்தர நியமனத்தை வழங்குவதற்கு உரிய நியமனம் செய்யும் அதிகாரியினால் நடவடிக்கை எடுக்கப்படுதல் வேண்டும்.

05. உரிய பதவியினை வழங்கியதும் இத்துடன் இணைக்கப்பட்டுள்ள படிவத்திற்கமைய அவ்அவ் நிறுவனங்களின் ஆளணியினர் பற்றிய விபரத்தினை இற்றைப்படுத்தும் பொருட்டு முகாமைத்துவ சேவைகள் பணிப்பாளர் நாயகத்திற்கு உடனடியாக இது தொடர்பில் அறிக்கையிடல் வேண்டும்.

06. முகாமைத்துவ சேவை சுற்றறிக்கை இல.33 இன் கீழ்வரும் கருத்திட்டங்களின் தொடர்பில் இந்த சுற்றறிக்கையின் நிபந்தனைகள் ஏற்புடையதாக மாட்டாது.

07. மேலும் இதற்குப் பின்னர் அரசாங்க சேவை, மாகாண அரசாங்க சேவை, அரச கூட்டுத்தாபனங்கள் மற்றும் நியதிச்சட்ட சபைகளுக்குத் தற்காலிக அமைய, பதிற்கடமை, ஒப்பந்த மற்றும் மற்றும் சலுகை அடிப்படையில் உத்தியோகத்தர்களைச் சேர்த்துக் கொள்வது, ஆளணியினர் தொடர்பில் முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் முன் அனுமதியினை பெற்று உரிய நிதி ஒதுக்கீட்டின் பொருட்டு அங்கீகாரம் பெற்றுக் கொண்டதன் பின்னர் என்பதால் நிறுவனங்களினதும் தலைவர்கள் இச்செயன்முறையினை பின்பற்றுதல் அவசியமாகும்.

08. இச் சுற்றறிக்கை பொதுத் திறைசேரியின் இணக்கப்பாட்டுடன் வெளியிடப்படுகின்றது.

ஒப்பம்/ பி.பீ. அபேகோன்
செயலாளர்
அரசாங்க நிர்வாக மற்றும் உள்நாட்டலுவல்கள் அமைச்சு

**தற்காலிக, அமைய (நாளாந்த), பதிற் கடமை, ஒப்பந்த மற்றும் கருணை அடிப்படையில் சேர்த்துக் கொள்ளப்பட்ட**
**<u>உத்தியோகத்தர்களை 2014.10.24 ஆந் திகதியிலிருந்து நிரந்தரமாக்குதல்</u>.**

அமைச்சு:

திணைக்களம்:

| நிரந்தரமாக்கப்பட்ட உத்தியோகத்தர்களின் விபரம் | | | தற்காலிக, அமைய (நாளாந்த), பதிற் கடமை, ஒப்பந்த மற்றும் சலுகை அடிப்படையில் சேர்த்துக் கொள்ளல் | | நிரந்தரமாக்குதல் | |
|---|---|---|---|---|---|---|
| பெயர் | பிறந்த திகதி | தே.அ.இல. | சேர்த்துக் கொள்ளப்பட்ட திகதி | சேர்த்துக் கொள்ளப்பட்ட பதவி | நியமனம் வழங்கப்பட்ட திகதி | பதவி |
| | | | | | | |
| | | | | | | |
| | | | | | | |